மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 17-ம் நாள் புதன்கிழமை
அ.வ.எண். 10/22
வா.சா.3

சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்: விஜயாதேவி தேதி : 17.06.26
வயது : க/பெ : மதன்சுந்தர்ராஜ்
கிராமம் : தொழில் :
மாவட்டம்:

---

**17.06.26 குறுக்கு விசாரணை**

1.எனது ஊர் சாயர்புரம் நடுவக்குறிச்சி ஆகும். வழக்கு சொத்து எங்கு உள்ளது என்றால் ஏரல் சிறுவழுதிநாடார்விளையில் உள்ளது. வழக்கு சொத்தினை பார்த்துள்ளேனா என்றால் நான் பார்த்துள்ளேன். சிவன் ஆறுமுக நாடார் என் சித்தப்பா ஆவார். நான் என்னுடைய நிரூபண உறுதிக்கூற்றில் சிவன் ஆறுமுக நாடார் என் சித்தப்பா என்று கூறவில்லை என்றால் சரிதான்.

2.எனக்கு திருமணம் ஆகி 43 வருடங்கள் ஆகிறது. 43 ஆண்டுகளாக நான் சாயர்புரம் நடுவக்குறிச்சி வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் வழக்கு சொத்தினை சிறு வயதில் தான் பார்த்தேன் என்றால் சரியல்ல. தற்போதும் பார்த்துள்ளேன். சிவன் ஆறுமுக நாடார் கிரையம் வாங்கிய சொத்தில் எனக்கு பங்கு கிடையாது என்றால் சரிதான். பிறகு என்ன காரணத்திற்காக வழக்கு சொத்தினை அவ்வப்போது பார்த்து வருவதாக சொல்கிறேன் என்றால்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.17 02:23:38 +0530

நாங்களும் எங்கள் சித்தப்பாவும் கூட்டு குடும்பமாக இருந்தோம் அதனால் பார்த்து வருகிறேன்.

3.என் சித்தப்பா யாரிடம் இருந்து வழக்கு சொத்தினை கிரையம் வாங்கியதாக கூறுகிறேன் என்றால் பொன்னையா நாடார் என்ற சுப்பையா நாடாரிடம் இருந்து 1956 ல் வாங்கினார். நான் எப்போது பிறந்தேன் என்றால் 1952 ஆகும். 1956 ல் நான் சிறுமியாக இருந்ததால் மேற்படி கிரையம் குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் உட்பிரிவு எண் என்ன என்றால் சரியாக தெரியாது. தபசில் சொத்து எத்தனை உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ள விபரம் தெரியாது என்றால் சரியல்ல. 3 ஆக பிரிக்கப்பட்டுள்ளது.

4.மேற்படி உட்பிரிவுகளுக்கும் பிரதிவாதிகள் பெயரில் பட்டா உள்ளது என்றால் தற்போது தான் மாற்றியுள்ளனர். அது தொடர்பாக எனது சித்தப்பா குடும்பத்தினர் வருவாய்துறையில் முறையீடு எதுவும் செய்துள்ளனரா என்றால் இல்லை. என் சித்தப்பா வழக்கு சொத்தில் கிணற்றில் இருந்து திலாய் மூலம் தண்ணீர் இறைத்து எலுமிச்சை, நார்த்தை, தென்னை மற்றும் கொய்யா மரங்கள் வைத்து அனுபவித்து வந்ததாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லும் மேற்படி மரங்கள் எந்த ஆண்டு பட்டு போயின என்று சொல்லவில்லை என்றால் ஆம்.

5.தபசில் சொத்தில் உள்ள உடை மரங்களை வெட்டி எந்த கோவிலுக்கு எந்த வருடம் முதல்  கொடுத்து வந்தோம் என்று சொல்லவில்லை என்றால் ஆம்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.17 02:23:41 +0530

ஆனால் குடும்ப கோவிலுக்கு கொடுத்து வந்தோம். தபசில் சொத்து பிரதிவாதியின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டு அவரது குடும்பத்தினர்தான் அனுபவித்து வருகின்றனர் என்றால் சரியல்ல. தபசில் சொத்தில் பாதுகாப்பிற்காக 2021ம் வருடம் ஹாலோபிளாக் கற்களால் கட்டிடம் கட்டி பூட்டு போட்டுள்ளனர் என்றால் சரியல்ல.

6.1956ல் சிவன் ஆறுமுக நாடார் வாங்கிய சொத்த வேறு தபசில் சொத்து வேறு என்றால் சரியல்ல. என் சித்தப்பா குடும்பத்தினர் வழக்குரையின் எல்கைமாலை மாற்றி போட்டு பிரதிவாதிக்கு இடையூறு செய்து வருகின்றனர் என்றால் சரியல்ல. வாதிகள் எனது உறவினர் என்பதால் அவர்களுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.17 02:23:45 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.